EASTERN UNIVERSITY, SRI LANKA
2 1 SEP 2018

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2014/2015 (ஜுன் /ஜுலை 2017)

## TLS 2223 யாப்பும் அலங்காரமும்

நேரம்:மூன்று மணித்தியாலயங்கள்

முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி 1

1. அ. செய்யுளின் உறுப்புகளை வகைப்படுத்துக. (03 புள்ளிகள்)
   ஆ. தளை என்றால் என்ன எனக் குறிப்பிட்டு அதன் வகைப்பாட்டை விளக்குக. (07 புள்ளிகள்)
   இ. பின்வரும் செய்யுளில் இடம்பெற்றுள்ள தளைகளை அடையாளங்கண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

   செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாளி
   முல்லைத்தார் மாமன்னர் முடித்தலையை முடுக்கிப்போய்
   எல்லைநீர் வியங்கொண்மூ விடைநுழையும் மதியம்போன்
   மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே

2. அ. பா, பாவினம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. யாப்பருங்கலம் புதிய பாவினம் என்று கொள்பவற்றை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

3. அ. செய்யுளின் வகைகளை எடுத்துக்கூறுக. (10 புள்ளிகள்)
   ஆ. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்பன பற்றித் தண்டியலங்காரம் கூறுவனவற்றை ஆராய்க. (10 புள்ளிகள்)

### பகுதி 2

4. பதிக மரபு தமிழில் தோன்றி வளர்ந்தவாற்றை மதிப்பிடுக (20 புள்ளிகள்)
5. "சந்தமும் சிலேடைகளும் செய்யுளை அழகுபடுத்துவன." இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)
6. வெண்பாவை அதன் பொதுவான இயல்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக. (20 புள்ளிகள்)
7. தமிழ்ச்செய்யுள் மரபில் ஆசிரியப்பா தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)